**நம்மாழ்வார் அருளிச் செய்த**
**திருவாய்மொழி**
**நான்காம் பத்து**

**மூன்றாம் திருவாய்மொழி - கோவைவாயாள்**
**விரும்பியபடியே காலோபாதியைக் கழித்து எம்பெருமான் தன்னைக் காட்ட, ஆழ்வார் அவனது ப்ரணயித்வ குணத்தில் ஈடுபட்டு அருளிச் செய்தல்**

** கோவை வாயாள் பொருட்டு * ஏற்றின்
எருத்தம் இறுத்தாய்! * மதிள் இலங்கைக்
கோவை வீயச் சிலை குனித்தாய்! *
குல நல் யானை மருப்பு ஒசித்தாய்! **
பூவை வீயா நீர் தூவிப் *
போதால் வணங்கேனேலும் * நின்
பூவை வீயாம் மேனிக்குப் *
பூசும் சாந்து என் நெஞ்சமே 1

பூசும் சாந்து என் நெஞ்சமே *
புனையும் கண்ணி எனதுடைய *
வாசகம் செய் மாலையே *
வான் பட்டாடையும் அஃதே **
தேசம் ஆன அணி கலனும் *
என் கை கூப்புச் செய்கையே *
ஈசன் ஞாலம் உண்டு உமிழ்ந்த *
எந்தை ஏக மூர்த்திக்கே 2

ஏக மூர்த்தி இரு மூர்த்தி *
மூன்று மூர்த்தி பல மூர்த்தி
ஆகி * ஐந்து பூதமாய் *
இரண்டு சுடராய் அருவாகி **
நாகம் ஏறி நடுக் கடலுள்
துயின்ற * நாராயணனே! * உன்
ஆகம் முற்றும் அகத்தடக்கி *
ஆவி அல்லல் மாய்த்ததே 3

மாய்த்தல் எண்ணி வாய் முலை
தந்த * மாயப் பேய் உயிர்
மாய்த்த * ஆய மாயனே! *
வாமனனே! மாதவா! **
பூத் தண் மாலை கொண்டு * உன்னைப்
போதால் வணங்கேனேலும் * நின்
பூத் தண் மாலை நெடு முடிக்குப் *
புனையும் கண்ணி எனதுயிரே 4

கண்ணி எனதுயிர் * காதல்
கனகச் சோதி முடி முதலா *
எண்ணில் பல் கலன்களும் *
ஏலும் ஆடையும் அஃதே **
நண்ணி மூவுலகும் * நவிற்றும்
கீர்த்தியும் அஃதே *
கண்ணன் எம்பிரான் எம்மான் *
கால சக்கரத்தானுக்கே 5

கால சக்கரத்தொடு * வெண்சங்கு அம்
கை ஏந்தினாய்! *
ஞால முற்றும் உண்டு உமிழ்ந்த *
நாராயணனே! என்றென்று **
ஓலம் இட்டு நான் அழைத்தால் *
ஒன்றும் வாராய் ஆகிலும் *
கோலமாம் என் சென்னிக்கு * உன்
கமலம் அன்ன குரை கழலே 6

குரை கழல்கள் நீட்டி * மண்
கொண்ட கோல வாமனா! *
குரை கழல் கை கூப்புவார்கள் *
கூட நின்ற மாயனே! **
விரை கொள் பூவும் நீரும் கொண்டு *
ஏத்த மாட்டேனேலும் * உன்
உரை கொள் சோதித் திரு உருவம் *
என்னதாவி மேலதே 7

என்னதாவி மேலையாய் *
ஏர் கொள் ஏழ் உலகமும் *
துன்னி முற்றும் ஆகி நின்ற *
சோதி ஞான மூர்த்தியாய் **
உன்னது என்னது ஆவியும் *
என்னது உன்னது ஆவியும் *
இன்ன வண்ணமே நின்றாய் *
என்றுரைக்க வல்லேனே? 8

உரைக்க வல்லேன் அல்லேன் * உன்
உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின் *
கரைக் கண் என்று செல்வன் நான்? *
காதல் மையல் ஏறினேன் **
புரைப்பு இலாத பரம் பரனே! *
பொய் இலாத பரஞ்சுடரே! *
இரைத்து நல்ல மேன் மக்கள்
ஏத்த * யானும் ஏத்தினேன் 9

யானும் ஏத்தி * ஏழ் உலகும்
முற்றும் ஏத்தி * பின்னையும்
தானும் ஏத்திலும் * தன்னை
ஏத்த ஏத்த எங்கெய்தும்? **
தேனும் பாலும் கன்னலும் *
அமுதும் ஆகித் தித்திப்ப *
யானும் எம்பிரானையே
ஏத்தினேன் * யான் உய்வானே 10

** உய்வு உபாயம் மற்று இன்மை
தேறிக் * கண்ணன் ஒண்கழல்கள் மேல் *
செய்ய தாமரைப் பழனத் *
தென் நன் குருகூர்ச் சடகோபன் **
பொய் இல் பாடல் ஆயிரத்துள் *
இவையும் பத்தும் வல்லார்கள் *
வையம் மன்னி வீற்றிருந்து *
விண்ணும் ஆள்வர் மண்ணூடே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---